# வடமேல் மகாண சபை - 2022

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வடமேல் மாகாண சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 19 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10(1) உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும் அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் சமர்ப்பிப்பதற்காக ஆளுனருக்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வட மேல் மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1003-07-01 வருமான தலைப்பான பாதுகாப்பு இல்லங்கள் மற்றும் தனியார் மருத்துவ நிலையப் பதிவுக் கட்டணங்களுக்காக மீளாவாண்டிற்குரிய வருமானமான ரூபா 1,347,750 மற்றும் கடந்த 06 ஆண்டுகளுக்காக பெற வேண்டிய வருமானமான ரூபா 9,872,990 ஆன பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கிடைக்கும் பணத்தை இத்தலைப்பின் கீழ் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | சரியான வருமானத் தலைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பிரதான செயலாளர் - 260 செலவினத் தலைப்பின் ஏசீஏ 06 நிதியல்லாரத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் 2102 ஆம் இலக்க செலவின விடயம் தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்களின் பெறுமதி ரூபா 57,541,473 எனக் காண்பிக்கப் பட்டிருந்த போதும் மாகாண சபையின் நிதி நிலைமை கூற்றில் அப்பெறுமதி ரூபா 58,405,413 எனக் காண்பிக்கப்பட்டமையால் மாகாண சபையின் நிதிக் கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 863,940 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இவ்வேறுபாடு எதிர்காலத்தில் ஒப்பிடப்பட்டு பெறுமதியை சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களின் பெறுமதி சரியாக இனங்காணப்பட வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு மாகாண திறைசேரி உள்ளடங்களாக அந்தந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் வட மேல் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல.

மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.5.1 செலவினத் தலைப்பு 201 – வடமேல் மாகாண ஆளுனர்

#### 1.5.1.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஜுலை 01 ஆம் திகதி விபத்திற்குட்பட்டிருந்த 2022 ஜுன் 15 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட இறுதி பரிசோதனை அறிக்கை பிரகாரம் 1,420,728 ஆன தொகையை சாரதியிடமிருந்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அத்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | வழக்கு தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அரசுக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 1.5.2 செலவினத் தலைப்பு - 203 - வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

#### 1.5.2.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை 15 ஒழுக்காற்று கோவைகளின் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை | காலதாமதம் உள்ள மூன்று பரிசோதனைகள் காணப்படுவதுடன் 07 பரிசோதனைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 05 பரிசோதனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன | ஒழுக்காற்று பரிசோதனை நடவடிக்கைகளை விரைவில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | குற்றச்சாட்டு பத்திரம் வழங்கப்பட்டிருந்த மற்றும் ஒழுக்காற்ற கட்டளை வழங்கி இருந்ததுடன் இரண்டு ஆண்டுகளுக்கும் 6 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலதாமத்துடன் காணப்படுகின்ற 07 சந்தர்ப்பங்கள் தெரிவு கணக்குப் பரிசோதனையின் போதுஇனம் காணப்பட்டது | காலதாமதத்துடன் கூடிய 7 பரிசோதனைகள் பரிசோதனைகளில் தற்போது 03 பரிசோதனைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒழுங்காற்று கட்டளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | காலதாமதம் இன்றி ஒழுக்காற்று கட்டளைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

**1.5.3 செலவினத் தலைப்பு 210 - வட மேல் மாகாண பிரதான அமைச்சு மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், பொறியியல் சேவை சட்டம் மற்றும் சமாதானம், கல்வி, உள்ளூராட்சி மற்றும் உள்ளூராட்சி நிர்வாகம், பொருளாதார மேம்பாடு, சுற்றாடல் அலுவல்கள், நீர் வழங்கள் மற்றும் நீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலா அலுவல்கள் தொடர்பான மாகாண அமைச்சர்**

**1.5.3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாடசாலை மாணவர்களுக்கு சலுகை விலையில் அப்பியாச புத்தகங்களை பகிர்ந்தளிக்கும் திட்டத்தின் கீழ் அமைச்சினால் 2019 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் விற்பனை செய்வதற்காக கல்வி அலுவலகங்கள் பாடசாலைகள் மற்றும் வெவ்வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 34,241,700 பெறுமதியான அப்பியாச புத்தகங்களுக்குரிய அந்த நிறுவனங்களில் இருந்து மேலும் பெற வேண்டிய தொகை ரூபா 4,627,877 ஆக இருந்தது. | குறித்த நிலுவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.3.2 எதிர்பார்க்கப்பட்ட விளைவினை (மூரவிரவ) பெற்றுக் கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2010 ஆம் ஆண்டில் மாகாண திட்டவட்டமான அபிவிருத்தி மானியத்தின் கீழ் ரூபா 10 மில்லியனான நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த வடமேல் மாகாண ஜனகலா மன்றத்தின் பழைய கேட்போர் கூடத்தில் மீளமைக்கும் நடவடிக்கைகள் மீளாய்வாண்டு இறுதி வரையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை | தகவல் பிரதான அமைச்சின் திட்டமிடல் பிரிவுக்கு கிடைத்தவுடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும | உரிய காலத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும் |
| (ஆ) வடமேல் மாகாண ஜனகலா மன்றத்தின் கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதற்காக 2019 ஆம் ஆண்டு வரை ரூபா 139,449,306 செலவிடப்பட்டு காணப்பட்ட போதும் மீளாய்வாண்டின் இறுதிவரை அந்நிர்மானம் பூர்த்தி | இச்செயற்திட்டத்தின் பெறுகை குழு ஒப்பந்தத்திற்காக மீண்டும் விலைகளைக் கோரி மீண்டும் ஒப்பந்தத்தை கையளிப்பது பொருத்தமானதென தீர்மானிக்கப்பட்டது. | குறித்த நிர்மானத்தை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

செய்யப்பட்டு இருக்கவில்லை அத்துடன் ரூபா 7,780,112 செலவழித்து நிறுவப்பட்டிருந்த மின்மாற்றியும் முறையே ரூபா 8,304,789 மற்றும் ரூபா 11,456,578 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த நீர் தாங்கியும் பாதுகாவல் நிலையமும் மீளாய்வாண்டின் இறுதிவரை விளைவற்று காணப்பட்டன.

### 1.5.4 செலவினத் தலைப்பு 211- வடமேல் மாகாண உள்ளூராட்சி மன்ற திணைக்களம்

#### 1.5.4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் 2009 - 2014 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் வழங்கப்பட்டிருந்த ரூபா 3,325,756 ஆன 07 மிகை அறவீட்டுச் சான்றிதழ் தொடர்பாக துரித நடவடிக்கை ஒன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மிகை அறவீடு தொடர்பாக மேன்முறையீடு பிரதேச சபைகள் சட்டத்தின் 172 (9) (8) அல்லது 172 (10) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக பிரதேச சபை செயலாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | மிகை அறவீடுகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.5 செலவின தலைப்பு 213 - வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்

#### 1.5.5.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டின் வடமேல் மாகாணத்தின் பரீட்சை பெறுபேறுகள் ஏனைய மாகாண பரீட்சை பெறுபேறுகளுடன் ஒப்பிடும் போது ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பெறுபேறுகளின் பிரகாரம் 6 ஆம் இடத்திலும் சாதாரண தர பெறுபேறுகளின் பிரகாரம் 8 ஆம் இடத்திலும் உயர்தர பெறுபேறுகளின் பிரகாரம் நான்காவது இடத்திலும் காணப்பட்டதுடன் இந்தப் பெறுபேறுகள் 2020 ஆண்டின் போது முறையே மூன்றாவது, எட்டாவது மற்றும் முதலாவது இடத்தில் காணப்பட்டது. | பாடசாலை நடத்தும் தினங்கள் மட்டுப்படுத்தப்பட்டமை அத்தோடு கோட்ட வலய மற்றும் மாகாண மட்டத்தில் மேற்பார்வைக்காக, சந்தர்ப்பங்கள் கிடைக்காமை, மாணவர் மதிப்பீட்டுக்காக தவணை பரீட்சை அல்லது கணிப்பீட்டு பரீட்சை நடாத்த முடியாமல் போனமை ஆகிய விடயங்கள் இதற்கு காரணமாக இருந்தது. | வடமேல் மாகாணத்தின் ஒட்டுமொத்த பெறுபேறுகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

**1.5.5.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வாரியபொல பயிற்சி நிலையத்தில் விசேட கல்வி பிரிவில் காணப்படும் பிள்ளைகளின் கேட்டல், பார்வை மற்றும் அறிவு மட்டம் உட்பட பரிசோதனைகள் பலவற்றை மேற் கொள்ளக்கூடிய 318 உபகரணங்கள் மற்றும் உப பாகங்கள் என்பன 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தாமல் விளைவற்று காணப்பட்டன | இந்நிலையத்தில் இதற்கு பொறுப்பாக இருந்த ஆசிரியர் ஓய்வு பெற்று சென்ற பின்னர் வேறு பொருத்தமான ஆசிரியர் ஒருவரை நியமிக்காமை இதற்கான காரணமாக இருந்ததுடன் தற்காலிக தீர்வு ஒன்றாக ஆசிரியர் ஆலோசகர் ஒருவர் நியமிக்கப்பட்டு செயற்பாட்டு மட்டத்தில் பேணி செல்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. | உபகரணங்களை குறித்த நோக்கங்களுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

**1.5.5.3 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்குள்ள அல்லது விட்டு விட வேண்டியதாக உள்ள 30 சம்பவங்களுக்குரிய ரூபா 4,175,496 கூட்டுப்பெறுமதியாக இருந்தது. இதில் ரூபா 1,670,940 பெறுமதியான 10 சம்பவங்கள் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்தது. | இதில் ஒரு பகுதி பதிவழிக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சியவற்றை சீராக்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2020 ஜனவரி மாதம் விபத்துக்கு உட்பட்ட வாகனமொன்று 1,436,000 செலவில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. மேற்படி வாகனம் முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டிருந்த போதும் சாரதி குடி போதையில் இருந்த காரணத்தினால் காப்புறுதி இழப்பீடு வழங்குதல் நிராகரிக்கப்பட்டு இருந்த போதும் சாரதிக்கு உரிய ஒழுங்காற்று கட்டளை ஒன்று வழங்குவது மீளாய்வாண்டின இறுதிவரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | கருத்து தெரிவித்திருக்கவில்லை. | மாகாண நிதி விதியின் பிரகாரம் பரிசோதனைகளை துரிதமாக மேற்கொண்டு வடமேல் மாகாண சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | |
|---|---|---|
| (இ) 2007 முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கிரியுள்ள வலய கல்வி அலுவலகத்தில் இடம்பெற்று இருந்த நிதி முறைகேட்டிற்குரிய நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்படாத இருந்ததுடன் மாகாண சபை நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் இதற்குரியதாக அறவிடப்பட வேண்டிய தொகை 13,609,655 ஆக இருந்தது. | கிரியுள்ள மக்கள் வங்கியின் உத்தியோகத்தர்கள் சிலரின் கவனயின்மை காரணமாக மோசடி செய்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தப் பட்டிருந்தாக புலனாய்வு மூலம் வெளிப்படுத்தப்பட்டது. ஆதலால் வடமேல் பிரதான செயலாளரின் தலைமையில் 03 சுற்று கலந்துரையாடல்கள் மக்கள் வங்கி உத்தியோத்தர்களுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | குறித்த புலனாய்வினை விரைவில் மேற்கொள்ள வேண்டும் |

### 1.5.5.4 முகாமைத்துவ செயற்திறனின்மை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| வடமேல் மாகாணத்தில் விஷேட கல்வி ஆசிரியர்களின் பற்றாக்குறையொன்று காணப்பட்ட போதிலும் அவ்வாறான 20 ஆசிரியர்களுக்கு விசேட கல்வி வகுப்பறை இல்லாத ஏனைய பாடசாலைகளில் இணைக்கப்பட்டு ஏனைய பாடங்களை நீண்டகாலமாக கற்பிப்பது கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனை பிரகாரம் இனங்காண கூடியதாக இருந்தது. அவ்வாறான ஒவ்வொரு ஆசிரியரும் பாடசாலைகளுக்கு இணைக்கப்பட்ட காலம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | வடமேல் மாகாண பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களுக்கு குறித்த விசேஷட கல்வி பிரிவிற்காக இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | வடமேல் மாகாணத்தில் விசேட கல்வி ஆசிரியர் பற்றாக்குறையொன்று காணப்படுவதால் அவ்வாறான ஆசிரியர்களை குறித்த பாடசாலைகளுக்கு ஈடுபடுத்த வேண்டும் |

## 1.5.6 செலவின தலைப்பு 221 – வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்

### 1.5.6.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) 1972 இன் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க சட்டத்தின் 43(i) ஆம் பிரிவின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் தேறிய இலாபத்தில் 10 சதவீதத்திற்கு மேற்படாத மற்றும் ரூபா 500 இற்கு குறையாத தொகையொன்றை கூட்டுறவு நிதியத்திற்கு பங்களிப்பு | இயங்குகின்ற சங்கங்களுக்கு குறித்த பணத்தை செலுத்துமாறு கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் இயங்காத சங்கங்களை கலைக்கும் போது | கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் பிரகாரம் கூட்டுறவு நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையை பெற்றுக்கொள்ள |

| | | | |
|---|---|---|---|
| | தொகையாக ஒவ்வொரு ஆண்டும் செலுத்த வேண்டிய போதிலும் நான்கு கூட்டுறவு உதவி ஆணையாளர் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 76,701,822 ஆக இருந்தது. | சொத்துக்களுக்கு ஈடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் | நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | இரண்டு கூட்டுறவு உதவி ஆணையாளர் பிரிவுகளில் அமைந்துள்ள கூட்டுறவு சங்கங்களில் ரூபா 98,992,459 ஆன பண மோசடி அல்லது பணப் பற்றாக்குறை மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் அறிக்கை இடப்படாத இருந்த போதும் அதற்குிய புலனாய்வு ஒன்று மேற்கொள்வது பலவீனமான விடயமொன்றாகும். | 05 சங்கங்களுக்குரிய பணம் அறவிடப்பட்டு வருவதுடன் 09 சங்கங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் 03 சங்கங்களுக்குரிய நடுவர் தீர்ப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 03 சங்கங்களுக்குரிய பொறுப்பு வாய்ந்தவர்கள் மரணித்திருப்பதால் மற்றும் ஒரு சங்கத்திற்கு உரிய நட்டத்தை உறுதிப்படுத்த முடியாமல் உள்ளது. | குறித்த புலனாய்வு நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ள வேண்டும் |

### 1.5.7 செலவினத் தலைப்பு 222- வடமேல் மாகாண காணி ஆணையாளர் திணைக்களம்

#### 1.5.7.1 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ---------------------------------------------------- | -------------------------------------------- | ------------------ |
| (அ) | நிக்கவரட்டிய பிரதேச செயலாளர் பிரிவிற்குரிய விளைச்சல் வரி மற்றும் வருடாந்த காணி வரியின் கீழ் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிப்பட வேண்டிய நிலுவை குத்தகை ரூபா 3,367,201 இருந்தது. | நிலுவை குத்தகை தொகையிலிருந்து ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளதுடன் எஞ்சிய நிலுவை குத்தகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குத்தகைத் தொகையை குறித்த காலத்தினுள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நீண்டகால காணி குத்தகையின் கீழ் 10 பிரதேச செயலக பிரிவுகளில் 17 சந்தர்ப்பங் களுக்குரிய 01 ஆண்டு முதல் 12 ஆண்டுகள் வரையான காலப் பகுதிக்குரியதாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவீடுகள் நிலுவையாக இருந்த குத்தகை தொகை ரூபா 97,804,188 ஆக இருந்தது. | நிலுவைகள் காணப்படும் நிறுவனங்களை அறிவூட்டுதல், நீதிமன்ற நடவடிக்கைகள் எடுத்தல், தவணைகளாக அறவிடுதல் குத்தகைய உடன்படிக்கைகளை இரத்து செய்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | குறித்த குத்தகைத் தொகையை உரிய காலத்தில் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

### 1.5.8 செலவினத் தலைப்பு 231- வடமேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

#### 1.5.8.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்ளூடனான தொடர்பு மற்றும் இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் 3(5) பிரிவின் பிரகாரம் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவை மூலம் அறவிடப்படுகின்ற கட்டணங்களிலிருந்து 50 சதவீதமொன்றை குறித்த மாகாண சபைகளுக்கு கொடுப்பனவு செய்ய வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,347,750 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்குரிய பெறவேண்டிய ரூபா 1,347,750 தொகையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் பிரகாரம் குறித்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

#### 1.5.8.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | குருணாகல் மாவட்டத்தின் மருந்துகள் தேவைப்பாட்டிற்காக 2014 ஆம் ஆண்டு முதல் 2022 காலப்பகுதியில் மருத்துவ வழங்கல் பிரிவிடமிருந்து (MSD) குருணாகல் பிரதேச சுகாதார அலுவலகத்திற்கு கிடைத்திருந்த மருந்துகளில் ரூபா 15,226,949 பெறுமதியான மருந்துகள் மற்றும் பெறுமதி இனங்காண முடியாத 37,716 ஆன சத்திரசிகிச்சை பொருளிப்பு தரத்தில் சித்தியடையாதிருந்திருந்ததுடன் அவற்றை மீளாய்வாண்டின் இறுதி வரையில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் காணப்பட்டன. | மருத்துவ வழங்கப் பிரிவின் மூலம் மருந்துகளை அகற்றும் முறை ஒன்று அறிவிக்கப்பட்ட பின்னர் இந்த மருந்துகளை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | தரத்தில் சித்தியடையாத மருந்துகள் மற்றும் சிகிச்சை பொருட்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | நிக்கவரட்டிய, அளவ்வ, மாவத்தகம வைத்தியசாலைகளில் 2021 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் காலாவதியாக இருந்த ரூபா 3,408,612 பெறுமதியான மருந்துகள் மற்றும் புத்தளம் மாவட்டத்தின் மருந்து களஞ்சியத்தின் 2021 களஞ்சிய அறிக்கையின் பிரகாரம் ரூபா 1,740,825 | காலாவதியான மருந்துகள் தொடர்பாக கைதவிர்ப்பு செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | காலாவதியான மருந்துகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

இற்கு அண்மித்த காலாவதியான 19 வகையான மருந்துகளை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

### 1.5.8.3 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டிலான சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாரவில ஆதார வைத்தியசாலையின் ஆரம்ப வைத்தியசாலையின் வெளிவாரி நோய் பிரிவு வலையமைப்பு செயற்திட்டத்திற்காக 2019 ஆம் ஆண்டின் போது சுகாதார அமைச்சிலிருந்து வழங்கப்பட்டிருந்த 09 மடிக் கணினிகள் 07 அச்சீட்டு பிரதி இயந்திரங்கள், 25 பார் கோட் ரீடர்கள் உட்பட உபகரணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. | செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு தேவையான கணினி அறிவுள்ள பயிற்சி பெற்ற பதவியணியினர் பற்றாக்குறை இதற்கு காரணமாக இருந்தது. | தேவையான பயிற்சி பெற்ற பதவியணியினரை பெற்றுக்கொண்டு செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளல் வேண்டும் |
| (ஆ) | புத்தளம் ஆதார வைத்தியசாலைக்கு 2017 ஆம் ஆண்டின் போது மருத்துவ பிரிவுகளுக்கு இடையே வளையமைப்புகளை மேற்கொள்வதற்காக 33 மடிக் கணினிகள் கிடைத்திருந்ததுடன் அதில் 16 பிரிவுகளுக்கு 26 கனணிகள் மாத்திரம் பகிர்ந்து அளிக்கப்பட்டிருந்தது பகிர்ந்தளிக்கப்பட்ட அனைத்து கணினிகளும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விளைவற்ற வகையில் காணப்பட்டதுடன் அவற்றின் உத்தர உத்தரவாத காலமும் கடந்து காணப்பட்டன | .போதியளவு வைத்திய பதவியணியினரை ஈடுபடுத்துவதில் சிக்கலாக இருந்ததால் இவ்வாறான தாமதங்கள் ஏற்பட்டதுடன் எதிர்காலத்தில் குறைபாடுகளை பூர்த்தி செய்து நிகழ்ச்சி திட்டங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன. | குறித்த உபகரணங்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும |

### 1.5.9 செலவினத் தலைப்பு – 232 -வடமேல் மாகாண ஆயுர்வேத திணைக்களம்

#### 1.5.9.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நாரம்மல ஆயுர்வேத வைத்தியசாலையின் மருந்துகள் உற்பத்தி தொழிற்சாலைக்காக ரூபா 806,095 கிரயம் ஒன்று மேற்கொண்டு 2021 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டிருந்த வாயு அடுப்பு முறைமையுடன் கூடிய வாயுறை மற்றும் ரூபா 504,624 ஆன கிரயமொன்று மேற்கொண்டு தாதியர் உத்தியோகத்தர் ஓய்வறை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எரிவாயு கொள்கலன் வழங்கப்பட்டதன் பின்னர் பயன்பாட்டுக்கு எடுக்கப்படும் நாரம்மல ஆயுர்வேத வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலை ஒன்றாக்குவதற்கு வேண்டுகோல்கள் முன் வைக்கப்பட்டுள்ளதால் தாதியர் உத்தியோகத்தர் ஓய்வறை மற்றும் அறைகள் நிர்மாணிக்கப்பட்டன. | குறித்த சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும. |

### 1.5.10 செலவினத் தலைப்பு 243 வடமேல் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம்

#### 1.5.10.1 செயற்திட்டங்களை நிறைவேற்றாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வலகும்புற மட்பாண்ட உற்பத்தி மற்றும் பயிற்சி நிலைய நிர்மானத்திற்காக மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்களின் கீழ் 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 9,727,058 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப் பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அச்செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | நிர்மாண நடவடிக்கைகளை 2023 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | தாமதம் இன்றி பூர்த்தி செய்து குறித்த செயற்பாட்டுக்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

#### 1.5.10.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------------ | --------------------------------------------------- | ------------------- |
| (அ) | கொஸ்கேனாகார மீரிஹாநேகம, வென்தருவ, கொஸ்கஹஅல மற்றும் ரண்தெனிகம ஆகிய புடவைக் கைத்தொழில் நிலையங்களுக்குரிய சேதமடைந்த ஐந்து கட்டிடங்கள் காணப்படுவதுடன் தற்போது அந் நிலையங்கள் விளைவற்றும் மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்டும் வருகின்றன. | இக்கட்டிடங்கள் அமைந்துள்ள காணியை அரசின் ஆக்கபூர்வமான நடவடிக்கை ஒன்றிற்காக பயன்படுத்துவதற்காக பிரதேச செயலாளருக்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | குறித்த கட்டிடத்தை பயனுள்ள செயற்பாட்டிற்கு ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | கொடவல கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையை நவீனமயப்படுத்து வதற்காக திட்டவட்டமான மானிய நிதி ஏற்பாட்டின் கீழ் மற்றும் மாவட்ட திட்டவட்ட அபிவிருத்தி நிதி ஏற்பாட்டில் மீளாய்வாண்டில் ரூபா 3,148,922 செலவிடப்பட்டு இருக்கையில் திருத்த நடவடிக்கைகள் முறையான மேற்கொள்ளப்படாமை காரணமாக தற்போது சுத்திகரிப்பு முறை விளைவற்று காணப்பட்டது | மீண்டும் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டு குறித்த செயற்பாட்டினை மேற்கொள்ளுமாறு பிரதான செயலாளருடன் 2023.05.10 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது. | சுத்திகரிப்பு முறைமையை விரைவில் பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

#### 1.5.10.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ----------------------------------------------- | --------------------------------------------------- | ------------------ |
| (அ) | 04 புடவைக் கைத்தொழில் நிலையங்களை கட்டியெழுப்பும் நோக்கில் அந்நிலையங்களுக்கு வழங்குவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 2,048,400 பெறுமதியான 20 பத்திக் இயந்திரங்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி கிடைத்திருந்ததுடன் கணக்காய்வு சந்தர்ப்பமான 2023 மே திகதி வரையிலும் அந்த இயந்திரங்களை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் மல்கடுவாவ மொத்த களஞ்சியத்தில் காணப்பட்டன. | அழிவடைந்து புடவைக் கைத்தொழில் நிலையங்களை நவீன மயப்படுத்தி ஆரம்பித்தன் பின்னர் அந்த இயந்திரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நோக்கதிற்குட்பட்ட செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்திற்கு சொந்தமான 04 ஜனசலு நிலையங்களில் இடம் பெற்றிருந்த ரூபா 3,206,282 ஆன நிதி மோசடி மற்றும் இருப்பு பற்றாக்குறை தொடர்பாக புலனாய்வு நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யாமல் இருந்ததுடன் புலனாய்வு அறிக்கையின் பிரகாரம் 4 சந்தர்ப்பங்களுக்கு உரிய அறவிடப்பட வேண்டிய ரூபா 643,014 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை | மீண்டும் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும் குறித்த உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய நடவடிக்கைகளை தாமதமின்றி பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

**1.5.11 செலவினத் தலைப்பு 251 - வடமேல் மாகாண விவசாயத் திணைக்களம்**

**1.5.11.1 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ---------------------------------------------- | ---------------------------------------------------- | ------------------- |
| (அ) | பெறுமதி இனங்காணப்படாத ஜப்பான் உதவியின் கீழ் 2013 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த ஹாவெஸ்டர் வகையிலான அறுவடை செய்யும் இயந்திரம் ஒன்று அவ்வாண்டிலிருந்து பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வாரியபொல பண்ணை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இந்த இயந்திரத்தை குருநாகல கமநல சேவை அபிவிருத்தி நிலையத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | குறித்த சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தினால் கல்கமுவ அரச விதைப் பண்ணையில் ஒரு ஏக்கர் வாழைச் செய்கைக்காக ரூபா 310,000 செலவில் நீர் விசுறும் முறையொன்று 2022 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டிருந்தது. 2023 ஜனவரி 20 ஆம் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனை போது நீர் விசுறும் முறைமை செயலற்ற நிலைமையில் காணப்பட்டது | அம் முறைமை மற்றும் தொடர்புடைய பிரதான நீர் பம்பி செயற்படாமையால் நீர் வழங்கள் முறைமையை பயன்பாட்டுக்கு எடுக்க முடியாமல இருந்தது. | நீர் விசிறும் முறைமையை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.11.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ------------------------------------------------ | ------------------------------------------------ | ------------------- |
| திணைக்களத்தினால் 2021 ஆண்டு திசெம்பர் 31 இல் ரூபா 15,930,000 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 50 Solar Power Daler கள் குருநாகல் மற்றும் வாரியபொல | விவசாயிகளின் பங்களிப்பு கிடைக்காமை இதற்கான காரணமாக இருந்தது. விவசாயிகள் பணத்தை கொடுப்பனவு செய்த பின்னர் | குறித்த சொத்துக்களை நோக்கத்துக்குட்பட்ட செயற்பாடுகளுக்கு பயன்படுத்த |

| | | |
|---|---|---|
| விவசாய வலய அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த முறையே 04 மற்றும் 07 இயந்திரங்களும் வாரியபொல பண்ணைக்கு வழங்கப்பட்டிருந்த 08 இயந்திரங்களும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை. விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட 31 இயந்திரங்களையும் செயற்திறனாக பயன்படுத்தப்படுகிறதா என்பது தொடர்பாக திணைக்களத்தினால் பின்தொடர் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை இனங்காண முடியவில்லை. | இயந்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | வேண்டும் |

**1.5.12 செலவினத் தலைப்பு 260 - வடமேல் மாகாண பிரதான செயலாளர் அலுவலகம்**

**1.5.12.1 வருமான முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிலுவை வருமானக் கூற்றின் பிரகாரம் 1002-04-03 ஆம் வருமான குறியீட்டு இலக்க கல்லு மற்றும் தரவாளை மற்றும் 1002-04-05 ஆம் இலக்க உள்நாட்டு மதுபான அனுமதிப் பத்திரங்களுக்குரிய 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய நிலுவை வருமானம் முறையே ரூபா 15,886,819 மற்றும் ரூபா 800,000 ஆக இருந்தது. | 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை மீதிகளுக்காக கடிதங்கள் மூலம் மற்றும் தொலைபேசி மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது அவ்வாறு அறுவிட முடியாத தரப்பினருக்காக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

**1.5.12.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| வடமேல் மாகாண சபையின் CCTV முறைமை ஓராண்டுக்கு மேற்பட்ட காலமாக செயலற்று நிலைமையில் காணப்படுவதுடன் உரிய நிலமைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | CCTV கேமரா முறைமையை செயற்படுத்துவது தொடர்பாக அறிக்கை ஒன்றை வழங்குமாறு SLT நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது அதன் பிரகாரம் தற்போது பொருத்தப்பட்டுள்ள முறைமை காலாவதியான தொழில்நுட்பமாக இருப்பதால் அதற்காக புதிய தொழில்நுட்பத்துக்கு பொருந்தும் முன்மொழிவொன்று அந்நிறுவனத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது | கேமரா முறைமையை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

**1.5.13 செலவினத் தலைப்பு 262 வடமேல் மாகாண கொள்கை திட்ட அமுலாக்கம் மற்றும் செயற்படுத்தும் திணைக்களம்**

**1.5.13.1 செயற்திட்டங்களை அமுலாக்குதல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண முதலீட்டு நிகழ்ச்சி திட்டத்துக்காக இணையதளத்தை அடிப்படையாகக் கொண்ட தகவல் முறைமை ஒன்றை வடிவமைக்கும் செயற்திட்டத்திற்காக 2018 செப்டம்பர் 01 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2019 மார்ச் 31 ஆம் திகதி அளவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் மீனாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் செயற்திட்டம் முடிவடையாமல் 2020 ஆம் ஆண்டில் இருந்த நிலைமையே நிலைமையே காணப்பட்டதுடன் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இதற்காக செலவிடப் பட்டிருந்த தொகை ரூபா 3,803,156 ஆக இருந்தது. | அபிவிருத்தி திட்டத்தின் கட்டமைக்கப்பட்ட திட்டத்தை தயாரிப்பதற்கு அதிக அளவு காலம் எடுப்பதன் காரணமாக உடன்படிக்கை செய்யப்பட்ட காலத்திலும் பூர்த்தி செய்ய முடியாமல் இருந்தது | குறித்த திட்டத்தை விரைவில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வடமேல் மாகாணத்திற்காக ஐந்தாண்டு மத்திய கால அபிவிருத்தித் திட்டத்திற்காக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் கிடைத்த நிதி ஏற்பாடுகளில் ரூபா 9,821,000 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் ஐந்தாண்டு திட்டம் 2020 ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக தயாரிக்கப் பட்டிருந்த போதும் குறித்த காலப்பகுதியில் அரைப் பங்கிக்கு மேல் முடிவடைந்திருந்த போதும் திட்டத்தின் பிரகாரம் குறித்த நோக்கங்களை நிறைவேற்றுதல் போதுமான மட்டமொன்றில் இருக்கவில்லை. | அபிவிருத்தி திட்டத்தின் ஆங்கில அச்சுப் பிரதிகள் 480 மாத்திரம் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் எமக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் வடமேல் மாகாணத்தின் அனைத்து மாகாண அரச நிறுவனங்கள் நியதிச் சட்ட நிறுவனங்கள் அனைத்து பிரதேச செயலகங்கள் (46) அத்தோடு மத்திய அரசின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் அனைத்துக்கும் வழங்கப்பட்டுள்ளன | ஐந்தாண்டு அபிவிருத்தி திட்டத்தின் இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைந்து கொள் வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.14. செலவினத் தலைப்பு 263 வடமேல் மாகாண வருமான திணைக்களம்

#### 1.5.14.1 வருமான முக--மைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இரண்டு வருமான குறியீடுகளின் கீழ் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வருமானம் ரூபா 116,926,499 ஆக இருந்தது இதில் ரூபா 89,717,594 என 77 சதவீதமும் ஆதனங்கள் கையளித்தலின் பேரில் மேலதிக முத்திரை வரியாக இருந்ததுடன் அதில் ரூபா 52,442,219 அதாவது 58 சதவீதமும் 2021 ஆம் ஆண்டுக்கு முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவையாக இருந்தது. வியாபார புரள்வு வரியின் கீழ் காணப்பட்ட ரூபா 27,208,855 ஆன மொத்த நிலுவைத் தொகையும் 2021 ஆம் ஆண்டுக்கு முன்னைய ஆண்டுகளுக்குரியதாக இருந்தன. அத்தோடு மீளாய்வாண்டில் இரண்டு வருமான குறியீடுகளுக்குரிய ரூபா 13,384,385 ஆன நிலுவை வருமானம் பதிவழிக்கப்பட்டு இருந்தது. | ஆதனங்களை கையளித்ததன் பேரில் முத்திரை கட்டணங்கள் நிலுவை மீதி ரூபா 30,473,720 தொகையை அறவிடுவதற்காக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன புரள்வு வரி நிலுவை மீதியிலிருந்து ரூபா 27,208,855 அறவிடப்பட்டு மேலும் ரூபா 7,283,978 பதிவழிக்கப்பட்டிருந்தது | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.15 விடய இலக்கம் – 24302 தச்சுவேலை வணிக முற்பணக் கணக்கு

#### 1.5.15.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| லடமேல் மாகாணத்தின் உள்நாட்டு மற்றும் பாரம்பரிய கைத்தொழில் மேம்படுத்தல் மற்றும் பராமரிப்பதற்கான தேவையான பயிற்சிளையும் வசதிகளையும் வழங்குவது இந்த முற்பணக் நடவடிக்கைகளின் நோக்கம் ஒன்றாக இருந்த போதும் 11 தச்சுப் பாடசாலைகளில் 06 இலும் 04 ஜனகலா மன்றங்களில் 01 இலும் 03 இலகு பொறியியல் நிறுவனங்களில் 01 இலும் மீளாய்வாண்டில் எவ்வித பயிற்சியும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அத்தோடு எஞ்சிய 05 தச்சுப் பாடசாலைகளிலும் 03 ஜனகலா நிறுவனங்களிலும் 03 இலகு இயந்திர பொறியியல் நிறுவனங்களிலும் மீளாய்வாண்டில் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை முறையே | இளைஞர் சமூகத்தில் காணப்படும் எண்ணங்கள் அடிப்படையில் இந்நிலையத்திற்கு தொடர்புபடும் அளவு விரைவாக குறைந்து வருவதும் மதியுரையாளர்களின் பற்றாக்குறையும் இதற்கு தாக்கமளித்துள்ளது. | புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்தி பயிற்சி நடவடிக்கை வழங்கு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

14 பேர் 04 பேர், மற்றும் 08 பேர் மாத்திரமாக இருந்தனர்.

**1.5.15.2 பெறவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் 93 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன்பட்டோர் மீதி ரூபா 2,102,970 ஆக இருந்தது. | 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய கடன் மீதிகள் தொடர்பாக பதவிநிலை உத்தியோகத்தர்களுடன் கூடிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதன் பரிந்துரையின் பிரகாரம் தேவையான எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்படும் | நிலுவை கடன் மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.16 விட இலக்கம். 24303 - புடவைக் கைத்தொழில் வர்த்தக முற்பணக் கணக்கு**

**1.5.16.1 பெறவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கடன்பட்டோர் மீதி ரூபா 46,549,904 ஆக இருந்ததுடன் அதில் 02 ஆண்டுகள் முதல் 24 வரையான காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 9,880,130 ஆன மீதியொன்று இருந்தது. | ஆட்கள் மற்றும் பட்டியல் கடன்பட்டோர் தொடர்பாக மாகாண சபை திறைசேரியால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரையின் பிரகாரம் அடுத்து நடவடிக்கை எடுக்கப்படும். 2012 ஆம் ஆண்டின் கடன் மீதி தொடர்பாக சட்டமா அதிபருக்கு நீதிமன்ற நடவடிக்கைகளை எடுப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் கடன் மீதிகளுக்காக முறையான ஒழுக்காற்று பரிசோதனை நடத்தப்படுகின்றத. | நிலுவை கடன் மீதிகள் தொடர்பாக தீர்வொன்றை பெறுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.17 விடய இலக்கம் 25002 – தொழில்முயற்சிகள் அபிவிருத்தி சேவைகள் ஒன்றிணைந்த இனவிருத்தி பண்ணை மாவத்தகம**

**1.5.17.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|
| காணி ஆணையாளர் நாயகத்தின் 2007 மே 04 ஆம் திகதிய கடிதத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் மாவத்தகம பிரதேச செயலாளரால் 2007 மே 16 ஆம் திகதி பசுக்களை | காணியை கையேற்ற நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் பெல்வத்த டெரி இண்டஸ்ட்ரீஸ் (தனி) கம்பெனிக்கு 15 ஏக்கர்களும் விமானப்படைக்கு 88 ஏக்கர் 02 ரூட் | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுக்க |

| | | |
|---|---|---|
| இனவிருத்தி நிலையமொன்றையும் பயிற்சி நிலையம் ஒன்றையும் ஏற்படுத்துவதற்காக மாவத்தகம தேனவர்வத்த காணியில் 119 ஏக்கர் 12 பேர்ச் காணி வடமேல் மாகாண விவசாய நீர்ப்பாசன கால்நடை உற்பத்தி திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டு இருந்தது மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை காணி கையளிப்புச் செய்த நோக்கத்தை அடைந்து கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | 16 பேர்ச் கையளிப்பதற்கு வேண்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

### 1.5.18 விடய இலக்கம் - 25003 வாரியபொல இழைய ஆய்வுகூட வர்த்தக முற்பணக் கணக்கு

#### 1.5.18.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு** | **பரிந்துரை** |
|---|---|---|
| கொரோனா வைரஸ் நிலையம் ஒன்றாக வாரியபொல இழைய ஆய்வுக்கூடம் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் மீண்டும் இழைய ஆய்வுக்கூடம் ஒன்றாக ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. புதிய இழைய ஆய்வுக்கூடம் ஒன்று மாவத்தகம தெனவர்த்த அரசின் பண்ணையில் நிர்மாணிப்பதற்கு 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 20,760,503 செலவிடப்பட்டிருந்த போதும் அதன் நிர்மாணமும் மீளாய்வாண்டின் இறுதிவரையில் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தக்காரர்களால் மாவத்தகம தெனவர்வத்த இளைய ஆய்வுகூடத்தை கையளிக்கும் போது அனைத்து நிர்மாண நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்படாமை, ஆய்வு கூடத்திற்காக மின் இணைப்பு வழங்காமை போன்ற காரணங்களினால் ஆய்வு கூடத்தின் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாமல் இருந்தது. | இழைய ஆய்வுகூட நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு முற்பணக் கணக்கு நடவடிக்கைகளின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 1.5.19 விடய இலக்கம் - 25102 "பண்ணை நடவடிக்கைகளை வழிநடாத்துதல் மற்றும் விதை நெல் வழங்கல்"

#### 1.5.19.1 பெற வேண்டிய கணக்குகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர் மீதி ரூபா 2,085,402 ஆக இருந்ததுடன் நீண்ட காலமாக அறவிடப்படாத கடன் மீதிகளை இனங்காண்பதற்கு முடியுமான வகையில் காலப்பகுப்பாய்வு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | மீனாய்வான்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட கடன் பட்டோர் மீதிக்காக கடன் பட்டோர் காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டுள்ளது. | கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

**1.5.19.2 செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|
| மீனாய்வான்டின் ஆரம்பத்தில் இருந்து காணப்பட்ட ரூபா 499,458 ஆன கடன்கொடுத்தோர் மீதியை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருடக் கணக்காக பின்னோக்கி தகவல்களை ஆராய்ந்து பார்த்ததுடன் அத்தகவல்கள் தொடர்பான சான்று பதிவினை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.19.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டிலான சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் பெப்ரவரி 02 ஆம் திகதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 3,662,756 பெறுமதியான வெங்காயக் களஞ்சியம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குறித்த செயற்பாட்டுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | விவசாயிகள் வெங்காயச் செய்கையிலிருந்து வெளியேறுதல் மற்றும் சந்தையில் அறுவடைக்காக உயர்ந்த விலை காணப்படும் போது அறுவடையை களஞ்சியப்படுத்தல் இடம்பெறாமை இதற்கான காரணமாக உள்ளது. | தேவைபாட்டை இனங்கண்டு நிர்மாணிக்கப்பட வேண்டும்.˙. |

**1.5.20 விடய இலக்கம் 26002 வாரியபொல பயிற்சி நிலையத்தின் நடவடிக்கைளை பராமரித்தல்**

**1.5.20.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வடமேல் மாகாண பயிற்சி நிலையத்தில் அமைந்துள்ள ''பஹசர'' உணவகம் 2020 ஆம் ஆண்டில் இருந்து விளைவற்று காணப்பட்டதுடன் கணக்காய்வு சந்தர்ப்பமான 2023 பெப்ரவரி 15 ஆம் திகதி வரையில் உணவகம் மற்றும் அதனுடனான சமையலறை பராமரிப்பு நடவடிக்கைகள் இடம் பெறாமை காரணமாக எதிர்காலத்தில் பயன்பாட்டுக்கு எடுக்க முடியாத வகையில் சிதைவடைந்த நிலைக்கு உட்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் பஹசர உணவகம் சுத்திகரிக்கப்பட்டு பயிற்சியாளர்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை குறித்த செயற்பாட்டுக்காக பயன்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) விடுதி பொறுப்பாளர் பதவி நிறுவனத்திற்காக அங்கீகரிக்கப் பட்டிருந்த போதும் அப்பதவி வெற்றிடமாக இருந்தமையால் விடுதி மேற்பார்வை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளும் மின் தொழில்நுட்பவியலாளர், அலுவலக உதவியாளர், தொழிலாளர் ஆகிய 06 பதவிகள் வெற்றிடங்கள் காரணமாக பயிற்சி நிலையத்தின் மின் பராமரிப்பு நடவடிக்கைகள், நிலத்தை நாளாந்தம் சுத்திகரித்தல், அலங்கரித்தல், பராமரித்தல் உத்தியோக பூர்வ விடுதிகள் மற்றும் விடுதிகளை துப்பரவு செய்தல் போன்ற நடவடிக்கைகளையும் முறையாக நிறைவேற்றுவதற்கு முடியாமல் இருந்தன. | எதிர்காலத்தில் குறைபாடுகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.21 வடமேல் மாகாண கைத்தொழில் சேவைகள் பணியகம்

#### 1.5.21.1 பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 09 உருப்படிகளின் கீழ் நீண்ட காலமாக இருந்து வரும் பெறவேண்டிய மீதிகள் ரூபா 4,252,309 ஆக இருந்தது. | அறவிடுவதற்கு உள்ள பணத்தை குறித்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கும் சீராக்கப்பட வேண்டிய மீதிகளை இனம் கண்டு கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய மீதிகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

#### 1.5.21.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|
| மீனாய்வான்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 பொறுப்பு உருப்படிகளின் கீழ் நீண்டகாலமாக இருந்து வரும் செலுத்த வேண்டிய மீதிகள் ரூபா 1,748,508 ஆக இருந்தன. | குறித்த மீதிகளை மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்திய பின்னர் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய மீதிகளை விரைவில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.22 வடமேல் மாகாண சுற்றாடல் அதிகாரசபை

#### 1.5.22.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 1990 இன் 12 ஆம் இலக்க வடமேல் மாகாண சுற்றாடல் சாசனத்தின் 21 (2) மற்றும் 21(3) இன் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திரத்தின் செல்லுபடி காலம் திட்டவட்டமாக குறிப்பிடப்பட வேண்டியதுடன் ஒரே தடவையில் ஒரு ஆண்டினை மிகைத்து அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்க முடியாததுடன் மாகாண சுற்றாடல் அதிகார சபை விநியோகித்திருந்த ஒவ்வொரு சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தினதும் செல்லுபடிக்காலம் முடிவடைந்ததன் பின்னர் மீண்டும் புதிதாக அனுமதி பத்திரம் ஒன்று பெற்றுக்கொள்ள அல்லது புதுப்பித்தல் இடம்பெறுகின்றதா என்பது தொடர்பாக பரீட்சிப்பதற்கு முடியுமான நிர்வாக நடைமுறை ஒன்று காணப்படவில்லை. | தற்போது எமது நிறுவனத்தின் அனுமதி பத்திரங்களை வழங்கும் செயற்பாடு கணினி மயப்படுத்தப்பட்டுள்ளதால் அனுமதி பத்திரம் ஒன்றின் செல்லுபடியான காலத்தை மிகைப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் குறித்த வியாபார உரிமையாளருக்கு செல்லிட தொலைபேசி தரவு முறை ஊடாக குறுஞ்செய்தி என்று மூலம் அனுமதி பத்திரத்தை புதுப்பிப்பதற்கு தேவையான அறிவித்தல் வழங்கப்படுகின்றது. | கணினி முறைமையின் காணப்படும் தகவல்களைப் பரீட்சிப்பதற்காக சந்தர்ப்பம் காணப்பட வேண்டியதுடன் அதன் செயற்பாடு அவ்வப்போது பரீட்சிக்கப்பட வேண்டும். |

### 1.5.23 வடமேல் மாகாண ஜனகலா மன்றம்

#### 1.5.23.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மன்றத்தினால் நடனம் இசை போன்ற உள்நாட்டு கலைகளுக்காக நடத்தப்பட்ட தனியார் வகுப்பிற்காக முன்னைய ஆண்டுகளில் பிரசித்தி பெற்ற ஆசிரியர்கள் நிறுவன மட்டத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டு உதவி வகுப்புகளை நடத்தி வருமானம் உழைத்து இருந்த போதும் தற்போது அவிடம் தனியார் துறைக்கு வழங்கப்பட்டு நில வாடகை மாத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | பாடநெறிகளை நடத்துவதன் மூலம் கருத்திற் கொள்ளக் கூடிய வருமானம் ஒன்று கிடைக்காமல் போனமை காரணமாக அந்த இசை வகுப்பு குத்தகை வாடகையின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. | தரமான பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சிலாபம் விஸ்கம் இல்லத்தை நடத்திச் செல்வதற்காக சிலாபம் நகர சபையால் கட்டணங்கள் அறுவிடாமல் வழங்கப்பட்டிருந்த கட்டிடத்தின் | காலத்திற்கேற்ற விற்பனை மேம்படுத்தல் முறைமைகளை எதிர்காலத்தில் பின்பற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | நுகர்வோரைக் கவரக்கூடிய நிலைமைக்கு உட்படுத்த வேண்டும் |

| | | |
|---|---|---|
| வியாபார நிலையம் ஒன்று நடத்தப்படுவதாக அறிவித்தல் பலகை மூலம் பிரசித்தப்படுத்தப்பட்டு கவர்ச்சிகரமான விற்பனை நிலையம் ஒன்றை நடத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

### 1.5.24 வடமேல் மாகாண இயந்திர உபகரண அதிகாரசபை

#### 1.5.24.1 பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வாடகைக் கட்டணங்கள், வாகனங்கள் திருத்த வேலை கட்டணங்கள், சேவை நிலையக் கட்டணங்கள் மற்றும் சிவில் வேலை கட்டணங்களாக ரூபா 48,276,393 ஆன பெறவேண்டிய வருமானங்களில் இருந்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வு செய்யப்படாமல் காணப்படும் மீதிகளின் மொத்தம் ரூபா 8,885,039 ஆக இருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை. | பெற வேண்டிய வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

#### 1.5.24.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|
| உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரகாரம் திட்டவட்டமான கட்டணங்களின் பேரில் அறவிடப்பட வேண்டிய வரியை அறவிடப்படும் மாதத்திற்கு பின்னர் வரும் மாதத்தில் 15 நாட்கள் அல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் 2021 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்குரிய செலுத்த வேண்டிய மொத்தம் ரூபா 9,860,836 ஆன வரி தொகையை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தில் தற்போது காணப்படும் நிதிச் சிக்கலினால் தவறியிருந்ததுடன் கொடுப்பனவு களுக்கு காணப்படும் எஞ்சிய தொகையை தவணை அடிப்படையில் கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வரிகளை தீர்வு செய்வதற்கும் நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் வரியை கொடுப்பனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.25 வயம்ப அபிவிருத்தி அதிகாரசபை**

**1.5.25.1 பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ------------------------------------------- | ------------------------------------------------------------ | ---------------- |
| மீளாய்வான்டின் இறுதியில் 9 கடன்பட்டோரிடமிருந்து பெறவேண்டிய ரூபா 3,095,595 காணப்பட்டதுடன் இதில் ரூபா 1,122,997 தொகை 2021 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்கு உரியதாகும். | பகுதி பகுதியாகவோ அல்லது குறித்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | குறித்த பணத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**1.5.26 வடமேல் மாகாண இயந்திர உபகரண அதிகாரசபை**

**1.5.26.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ---------------------------------------- | ------------------------------------------------------------ | ---------------- |
| வருடக் கணக்காக இருந்து வரும் அதிகாரசபைக்கு உரிய நடைமுறை கணக்கு ஒன்று வங்கி மேலதிப்பற்று நிலைமை காணப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் மேலதிகப் பற்று வட்டியாக ரூபா 1,018,643 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது எனினும் 04 சேமிப்புக் கணக்குகளில் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 66,028,930 ஆன மீதியொன்று காணப்பட்டது. | இக்கணக்கு பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு பிரிவிற்காக நடத்திச் செல்லப்படுகின்றதுடன் அச்சேவையை பெற்றுக் கொண்ட நிறுவனத்தினால் நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் பணத்தை கொடுப்பனவு செய்யாமை இதற்கான காரணமாக இருந்தது. | பிரிவுகளுக்கிடையே நிதி முகாமைத்துவத்தை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும |

**1.5.26.2 செயற்திட்டங்களை செயற்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ------------------------------------ | ------------------------------------------------------------ | ---------------- |
| அதிகார சபைக்காக மென்பொருள் முறைமை ஒன்றை வடிவமைத்து 2021 மார்ச் 31 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்வதற்கு ரூபா 1,485,000 தொகைக்கு தனியார் நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை செய்து முற்பணமாக ரூபா 445,500 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உடன்படிக்கை | மீண்டும் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான மொடியுல்களை தாமதம் இன்றி தயாரிக்க வேண்டும். |

செய்யப்பட்ட ரூபா 620,000 ஆன ஆழனரடந 3, 4 மற்றும் 5 ஆகிய பகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை

### 1.5.26.3 பெற வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2008 ஆம் ஆண்டு முதல் 2022 காலப்பகுதியில் தனி நபர்கள் வியாபாரங்களுக்காக 20 கடனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 37,000,000 ஆன கடன் தொகையில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் தவணை ஒன்றோ அல்லது வட்டியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பெற வேண்டிய நிலுவை நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு பல சந்தர்ப்பங்களில் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது எனினும் இதுவரை அந்த நிலுவைத் தொகையை அறவிட முடியாத இருந்ததால் மீண்டும் அனைத்து நிறுவனங்கள் ∴ நபர்களுக்கு அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் தொகையை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் தாமதம் இன்றி எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகார சபையின் செயற்படுத்தப்படுகின்ற 10 கடன் வகைகளுக்குரிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக காணப்பட்ட கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 54,763,658 ஆக இருந்தது. | கடனாளிகளை இனம் கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடனை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை தாமதம் இன்றி மேற்கொள்ள வேண்டும். |

### 1.5.26.4 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையின் பிரதான செயற்பாட்டு வருமானமான பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவைகளில் முறையே ரூபா 56,199,439 மற்றும் ரூபா 129,958,953 பெற வேண்டிய வருமானம் ஒன்று மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்டதுடன் அதில் ஓராண்டுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் மீதிகள் முறையே ரூபா 27,990,352 மற்றும் ரூபா 13,319,075 ஆக இருந்தது. | இதில் அநேகமானவை மாகாண சபை நிறுவனங்களாக இருந்ததுடன் அது தொடர்பாக மாகாண திறைசேரியுடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அதிகார சபையின் கீழ் நிர்வகிக்கப்படும் மஹகெதர சுற்றுலா கேந்திரத்திற்கு ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் அறவிடப்பட வேண்டிய ரூபா 262,500 தொகையும் 1 ஆண்டிற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்துக்கு இடையிலே அறவிடப்பட வேண்டிய ரூபா 220,605 மற்றும் 2022 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 33,500 என மொத்தம் ரூபா 516,605 தொகையான பெறவேண்டிய மீதியொன்று மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்டது. | இதுவரை அந்நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு முடியாமையால் மீண்டும் அனைத்து நிறுவனங்கள்∴ நபர்கள் ஆகியோருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**1.5.27 வடமேல் மாகாண முன்பள்ளி சிறுவர் கல்வி அபிவிருத்தி அதிகார சபை**

**1.5.27.1 செயறபாட்டு வினைத்திறனின்மை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2003 இன் 04 ஆம் இலக்க வடமேல் மாகாண முன்பள்ளி சிறுவர் கல்வி அபிவிருத்தி அதிகார சபை சாசனத்தின் IV ஆம் அட்டவணையில் முன்பள்ளி கல்வி அபிவிருத்தி நிறுவன மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல் சாசனத்தின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரே மட்டத்திலும் நிறுவனத்தில் தரத்தை மேம்படுத்தும் வகையில் நடத்திச் செல்லப்படுவதற்காக முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்ட மாதிரி படிவங்கள் மூலம் மேற்பாவை மற்றும் ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டின் பின்னர் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | தற்போது முன்பள்ளி பாடசாலைகளின் மேற்பார்வைக்காக இப்படிவங்களை உத்தியோகத்தர் களுக்கு வழங்கி அதன் பிரகாரம் முன்பள்ளிகளை மேற்பார்வை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முன்பள்ளி சிறுவர் கல்வி அபிவிருத்தி நிறுவனங்கள் மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்ச்சியாக மேற் கொள்ளப்பட வேண்டும்∴ |

### 1.5.28 வடமேல் மாகாண வீதி பயணிகள் சேவைகள் அதிகார சபை

#### 1.5.28.1 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வடமேல் மாகாண வீதி பயணிகள் சேவைகள் சாசனத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரால் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2004 ஜனவரி 16 ஆம் திகதி வர்த்தமானில் வெளியிடப்பட்ட கட்டளைகள் மற்றும் திருத்தங்களின் பிரகாரம் வடமேல் மாகாணத்தினுள் பயணிகள் போக்குவரத்து தேவைகளை கண்காணித்ததன் பின்னர் நிரந்தரமாக பேருந்து சேவைகள் தேவைப்படும் வீதிகளை உறுதிப்படுத்துதல் மற்றும் திறந்த குறைந்த கேள்வி செயற்பாட்டின் மூலம் அனுமதிபத்திரதாரிகள் தெரிவு செய்யப்பட வேண்டும். எனினும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் வீதி அனுமதிபத்திரங்கள் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | இவ்வீதி அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவின் மூலமும் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மீண்டும் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. | வீதி அனுமதிபத்திரங்கள் வழங்குதல் காணப்படும் சட்ட விதிகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2011 ஆம் ஆண்டின் போது பெறுகை செயற்பாட்டின் ஊடாக புதிய வீதி அனுமதி பத்திரங்கள் வழங்கும் போது 05 ஆண்டுகள் காலபகுதிக்கு வரையறுக்கப்பட்டு அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. அதன் பின்னர் வீதி அனுமதிபத்திரங்கள் வழங்குதல் அனைத்தும் அவ்வாறான வரையறை இன்றி வழங்கப்பட்டிருந்தன. 2011 ஆம் ஆண்டின் போது 05 ஆண்டு காலப்பகுதிக்காக வழங்கப்பட்ட 40 வீதி அனுமதி பத்திரங்களுக்கு மாத்திரம் அனுமதிப்பத்திர காலஎல்லை முடிவடைந்ததன் பின்னர் மீண்டும் கேள்வி கோரியிருந்தால் அதிகாரசபைக்கு ரூபா 38,575,400 ஆன வருமானம் ஒன்றை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்திருக்கும். | 2016 ஆம் ஆண்டின் பின்னர் புதிய அனுமதி பத்திரங்களை கேள்வி கூறும் போது இந்நிபந்தனை அகற்றப்பட்டுள்ளது. | வீதி அனுமதி பத்திரங்களை வழங்குதல் காணப்படும் சட்ட விதிகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்காக அதிகார சபைக்குப் பெறவேண்டிய நிலுவை மாதாந்த ஓட்டக் குறிப்பு பதிவுப் பத்திர கட்டணங்கள் மற்றும் நிலுவை மாதாந்த | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எதிர்காலத்தில் எடுக்கப்படும் | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | நுழைவு கட்டணங்கள் முறையே ரூபா 15,899,000 ரூபா 2,885,400 ஆக இருந்ததுடன் அதற்குரிய தாமதக் கட்டணங்கள் முறையே ரூபா 3,238,600 மற்றும் ரூபா 494,600 ஆகவும் இருந்தன | | வேண்டும |
| (ஈ) | 2019 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்குரிய அதிகாரசபைக்கு பெறவேண்டிய மேலதிக பிரயாண தடவை வருமானம் ரூபா 4,218,000 மற்றும் அதற்குரிய தாமதக் கட்டணங்கள் ரூபா 1,139,700 ஆக இருந்தது. | இந்நிலுவை வருமானத்தை கொடுப்பனவு செய்வதற்குள்ள பேருந்துகளில் அதிக அளவில் பஸ் வியாபாரத்திலிருந்து விலகி உள்ளதால் நிலுவை வருமானத்தை அறவிடுவது சிக்கலாக உள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |
| (உ) | 2011 ஆம் ஆண்டு முதல் திசெம்பர் 31 ஆம் தேதி வரையான காலப்பகுதிக்குரிய அதிகார சபைக்கு பெறவேண்டிய புதிய அனுமதிபத்திர சேவை கட்டணங்கள் வருமானம் ரூபா 4,771,000 ஆக இருந்தது | இந்த புதிய அனுமதிப்பத்திர கட்டண வருமானத்தில் ரூபா 1,996,000 ஆன தொகைக்குரிய வீதி அனுமதிப்பத்திரங்கள் தற்போது இரத்தாகியுள்ளதுடன் அக்கட்டணங்களை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 2,775,000 ஆன தொகையில் ரூபா 2,175,000 தொகை இது வரை விடப்பட்டுள்ளது. | விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | சாரதி மற்றும் நடத்துனர்கள் அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டிருந்த பேருந்துகளின் எண்ணிக்கை தொடர்பாக கருத்துக் கொள்ளாமை மற்றும் அனுமதி பத்திரங்கள் இல்லாத பேருந்து ஊழியர்களுக்காக நடமாடும் பரிசோதனை பிரிவினால் தண்டப் பணம் விதிக்காமை காரணமாக பேருந்து ஊழியர்கள் அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்காமையால் அதிகார சபைக்கு வருடாந்தம் இழக்கப்பட்ட வருமானம் ரூபா 3,591,100 ஆக இருந்தது. | தற்போது நடமாடும் பரிசோதனைகள் பிரிவின் மூலம் பேருந்துகள் பரீட்சிக்கப்பட்டு வருகின்றன. | அனைத்து அனுமதிப்பத்திரமுடைய பேருந்துகளுக்காக சாரதி, நடத்துனர் அனுமதி பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (எ) | சாரதி மற்றும் நடத்துனர்கள் அனுமதிப்பத்திரங்கள் முறையே 02 ஆண்டுகளுக்கும் 03 ஆண்டுகளுக்கும் இடையில் புதுப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிவல்லை. அவ்வாறு அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டு இருந்தால் அறவிடப்படக்கூடிய | தற்போது நடமாடும் பரிசோதனைகள் பிரிவின் மூலம் பேருந்துகள் பரீட்சிக்கப்பட்டு வருகின்றன. | அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்கப்படாத சந்தர்ப்பங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமானம் ரூபா 896,800 மாத்திரமாக காணப்பட்டது. | | |
| (ஏ) | 2012 ஒக்தோபர் 15 ஆம் திகதிய 17580/05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் 16 (ஓ) பிரகாரம் புதிய அனுமதிப் பத்திரங்களை வழங்கும் போது நடைமுறையிலுள்ள நிபந்தனைகளை பாதுகாப்பது பொருட்டு ரூபா 10,000 ஐ மீளச் செலுத்த வேண்டிய பிணை வைப்பாக அறவிடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரையில் வழங்கப்பட்டிருந்த 1426 அனுமதிப்பத்திரங்களுக்காக பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய ரூபா 14,260,000 ஆன பிணைத் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அச்செயற்பாடு இதுவரை மேற் கொள்ளப்படாமல் இருந்ததுடன் எதிர்காலத்தில் வீதிகள் கேள்வி கோரி புதிய அனுமதிப் பத்திரங்களை வழங்கும் போது உரிய பிணைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து அனுமதி பத்திரங்களுக்காகவும் பிணைகளை வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.28.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரை ரூபா 18,215,169 தொகை செலவழித்து வீதி அமைச்சின் நிதி ஏற்பாடு மற்றும் வழிகாட்டலின் கீழ் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்காக நிறுவப்பட்டு இருந்த கணனியை அண்மித்த செயற்பாட்டு முறைமையின் உள்ளடக்கப்பட்டுள்ள பணப் பெறுவனவு, கொடுப்பனவு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், அம் முறைமை ஊடாக செயற்படுத்தப் படாமை, வீதி அனுமதி பத்திரங்கள், சம்பவ திரட்டு பத்திரங்கள் போன்றவை தொடர்பாக கொடுப்பனவுகள் தானியங்கி உறுதிப்படுத்தப்படாமை, உப அலுவலகங்களுக்குரியதாக மேற்கொள்ள வேண்டிய தண்டப்பன பத்திரம் சரியாக இல்லாமை போன்ற குறைபாடுகள் இருந்தன. | முறைமையை நாளதுவரையாக்குவதற்கு ஆலோசனைகள் தற்போது அதிகாரி சபையின் மூலம் குறித்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. | முறைமையில் காணப்படுமன் குறைபாடுகளை சீராக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் |

### 1.5.28.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ---------------------------------- | -------------------------------------- | ---------------- |
| (அ) | அதிகார சபையின் முன்னாள் தலைவரிடமிருந்து, பணிப்பாளர் படிகள், எரிபொருள் படிகள் கூடுதலாக கொடுப்பனவு ரூபா 1,325,705 தொகை மீளாய்வாண்டு இறுதிவரையில் அறவிடப்படாமல் காணப்பட்டது. | வடமேல் மாகாணத்தின் சட்ட பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது அதன் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த பணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அதிகார சபையால் புதிய அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது பேருந்து உரிமையாளர்களபிடமிருந்து அதிகார சபையின் சட்டங்கள், விதிகள் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக சத்திய கடதாசியொன்றை பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும் அனுமதி பத்திரத்தின் உரிமையாளர் வேறுபடும்போது அவ்வாறான கடதாசியொன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதி பத்திரத்தின் உரிமையாளர் வேறுபடும் போது கடதாசியொன்றை பெற்றுக்கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சத்தியக் கடதாசியொன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் |

### 1.5.28.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ------------------------------------------ | ------------------------------------------------------ | ---------------- |
| அதிகார சபையின் 2013 ஒக்டோபர் 29 ஆம் திகதிய ஆட்சேர்ப்பு கோவையின் 5.4 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்காத வகையில் 2018 ஆம் ஆண்டு முதல் 2022 காலப்பகுதியினுள் முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழில்நுட்பம் அல்லாத) சேவை வகுதிக்காக 08 பேரும் ஆரம்ப சேவை வகுதிக்காக 06 பேரும் பணிப்பாளர் சபையினதும் தலைவரினதும் தற்றுனிவின் பேரில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். | எதிர்காலத்தில் பதவியணியினர் களுக்காக ஆட்சேர்க்கும் போது ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.29 வட மேல் மாகாண பிரதேச வளங்கள் அபிவிருத்தி அதிகாரசபை

#### 1.5.29.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------ | ------------------------------------------------------------ | ---------------- |
| (அ) | 2005 ஆம் ஆண்டின் போது ரூபா 6,137,000 தொகை செலவிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த சின்னபாடுவ இனவிருத்தி செயற்திட்டம் 2015 ஆம் ஆண்டின் போது வெளித்தரரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதும் 2017 ஆம் ஆண்டு முதல் செயற் திட்டம் செயற்படுத்தப்படாது இருந்ததுடன், அத்திகதி முதல் கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் காணப்பட்டன அவ்வாறே குத்தகைக்கு வழங்கிய காலப்பகுதிக்குரிய நிலுவை வாடகை நிலுவைத்தொகை ரூபா 480,000 ஆக இருந்தது. | குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக பொருத்தமான நபர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பேரில் எதிர்காலத்தில் குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்று வகையிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2007 ஆம் ஆண்டில் ரூபா 875,000 தொகை செலவிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த முந்தல் சுற்றுலா அவதானிப்பு நிலையம் மீளாய்வாண்டின் இறுதி வரை எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தாமல் விளைவற்று காணப்பட்டது. | கேள்வி கோரப்பட்டும் குத்தகையாளர்கள் முன் வராமல் இருந்தமை இதற்கு காரணமாக இருந்தது. | செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றப்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (இ) | அதிகார சபையின் வளவில் அமைந்துள்ள காணியில் மீன்பிடி தடாகமொன்றை நிர்மாணிப்பதற்காக 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 4,925,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் அந்நிர்மாணம் இதுவரை பயன்பாட்டுக்கு எடுக்க முடியாத நிலைமையில் காணப்பட்டது. | இந்த மீன்பிடி தடாகத்தின் அத்திவாரத்தின் மீது மீண்டும் நிர்மாணங்களை செய்வதற்கு பொருத்தமான மட்டத்தில் காணப்படாமையால் இத்தாங்கியின் பகுதிகள் மண் நிரப்பப்பட்டு அந்நிலப் பிரதேசத்தை அதிகாரசபையின் பயன்பாட்டிற்கு இருக்கக் கூடியதாக தயாரிக்கப்பட்டுள்ளது. | முறையான சாத்தியவள ஆய்வு ஒன்றின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டு திட்டமிடப்பட்ட பிரகாரம் பராமரித்துச் செல்லப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இறால்களுக்கு தொற்றும் வெள்ளை புள்ளி வைரஸ் நோயைக் கட்டுப்படுத்துவதற்காக ரூபா 7,511,710 ஆன கிரயமொன்று மேற் கொள்யப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட "ஊசு" ஆய்வு கூடத்தில் 2018 ஆம் ஆண்டு முதல் இரசாயன ஆய்வு கூட செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்தன. | இறால் வளர்ப்பிற்கு காலரீதியாக காணப்பட்ட தடைகள் மற்றும் வரையறைகள் ஆய்வு கூடகங்களுக்கு இடையேயான போட்டி போன்ற காரணங்கள் அடிப்படையில் போதிய அளவு வருமானம் ஒன்று உழைப்பதற்கு முடியாமையால் ஆய்வு கூட நடவடிக்கைகளால் எதிர்பார்த்த இலக்கை நோக்கி அடைவதற்கு முடியாதிருந்தது. | செயற்திட்டத்தை திட்டமிடப்பட்ட பிரகாரம் பேணிச் செல்வதற்கும் எதிர் காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தால் வேண்டும். |

### 1.5.29.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட மீன் உற்பத்தி செயற்திட்டம் ஆரம்பத்திலேயே செயலற்று இருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 4,140,000 பெறுமதியான கட்டிடங்கள் விளைவற்று காணப்பட்டன. | இச்செயற்திட்டத்திற்குரிய சொத்துக்களில் இதுவரையில் அதற்குரிய கட்டிடங்கள் மாத்திரமே விளைவற்றுக்கு காணப்படுகின்றன | கட்டிடங்களை திட்டவட்டமான செயற்பாட்டிற்கு ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் |

### 1.5.29.3 பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபைக்கு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 4,530,776 ஆக இருந்தது அதில் வனப் பாதுகாப்பு திணைக்களத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 2,150,000 தொகையாக இருந்தது. | வனப் பாதுகாப்பு திணைக்களத்திடமிருந்தும் ஆரச்சிகட்டுவ பிரதேச செயலகத்திடமிருந்தும் ் அறவிடப்பட வேண்டிய தொகைகள் முறையே ரூபா 2,150,000 மற்றும் ரூபா 114,850 இற்காக அந் நிறுவனங்களுக்கு தெரியப்படுத்தி இருந்த போதும் உரிய பொறுப்பேற்றல் கிடைத்திருக்கவில்லை. E7 இலங்கை தனியார் நிறுவனத்திலிருந்து பெற வேண்டிய ரூபா 480,000 இற்காக சட்ட ஆலோசனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | நிலுவை கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 1.5.30 வடமேல் முதலமைச்சர் நிதியம்

#### 1.5.30.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒவ்வொரு ஆண்டும் வட்டித் தொகையுடன் புதுப்பிக்கப்படும் சுனாமி வைப்புக்கள் நிலையான வைப்புக் கணக்கொன்றில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 8,384,823 ஆன மீதி ஒன்று காணப்பட்டதுடன் இத்தொகையை ஈடுபடுத்துவது தொடர்பாக கொள்கை ரீதியான தீர்மானமொன்று எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | 2004 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து இதுவரை காணப்படுவதுடன் வெளிப் படுத்தல் நடைமுறை ஒன்று இல்லாதமையால் இந்நிதியத்தின் கீழ் சுட்டிக் காட்டுவது மாத்திரம் இடம் பெற்றுள்ளது. | பொதுமக்கள் சேவை நிறைவேற்றக்கூடிய செயற்பாடு ஒன்றுக்கு ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.31 வடமேல் மாகாண விளையாட்டு நிதியம்

#### 1.5.31.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1992 இன் 04 ஆம் இலக்க வடமேல் மாகாண விளையாட்டு சாசனத்தின் பிரகாரம் பிரதேச செயலக பிரிவுகளில் விளையாட்டு மற்றும் உடற்கல்வியை மேம்படுத்துதல், அபிவிருத்தி செய்தல் அக்கறை செலுத்துதல் மற்றும் நிர்வகித்தல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு பிரதேச விளையாட்டு அதிகார குழுக்களைள் தாபிக்க வேண்டிய போதிலும் மீளாய்வான்டிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை | 2023 ஆம் ஆண்டு முதல் பிரதேச விளையாட்டு அதிகார குழுக்களை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பிரதேச விளையாட்டு அதிகாரக் குழுக்களை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 1.5.32 வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி நிதியம்

#### 1.5.32.1 பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் மூலம் கூட்டுறவு சங்கங்களுக்கு | இச்சங்கங்களில் அனேகமானவை செயலற்றதாகவும் கலைக்கும் | நிலுவைத் தொகையை விரைவில் அறைபடுவதற்கு |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்டிருந்த கடன் தொகைகளிலிருந்து ஆண்டின் இறுதிவரையில் கடன் கொடுப்பனவு நிறுத்தி வைத்திருந்த 16 சங்கங்களில் இருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையில் நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிய காணப்பட்ட நிலுவை கடன் மீதி ரூபா 26,591,409 ஆக இருந்ததுடன் கடன் தொகை நிலுவையாக காணப்படும் காலம் 01 ஆண்டு முதல் 22 ஆண்டுகளுக்கு இடைப்பட்டிருந்தது. | நிலைமையில் காணப்படுவதாலும் கடனை அறவிடுவது சிக்கலாக உள்ளது எனினும் தொடர்ந்தும் கடன் அறவீட்டு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.33 வடமேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய முறைமை

#### 1.5.33.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ----------------------------------------- | ------------------------------------- | ---------------- |
| ஓய்வூதிய முன்மொழிவு நடைமுறையில் கொடுக்கல் வாங்கல்கள் உட்பட விரிவான கணனி வகைப்படுத்தலுக்காக நிகழ்ச்சித் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு 2010 ஆம் ஆண்டின் போது வடமேல் மாகாண பயிற்சி நிலையத்துடன் ரூபா 672,000 இற்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக முற்பணமாக ரூபா 168,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் குறித்த செயற்பாட்டினை நிறைவேற்றுவதை வடமேல் பயிற்சி நிலையத்தினால் கைவிடப்பட்டிருந்தது ஆண்டின் இறுதியில் அந்த முற்பணத்தில் இருந்து மேலும் பெற வேண்டிய தொகை ரூபா 140,000 ஆக இருந்தது. | வடமேல் மாகாண பயிற்சி நிலையத்தினால் குறித்த பணத்தை செலுத்தி முடிக்கா விட்டால் உடன்படிக்கையின் பிரகாரம் சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். | பணத்தை அறவிடுவதற்கும் கணினி நிகழ்ச்சித்திட்டத்தை விரைவில் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.34 வடமேல் மாகாண வீடமைப்பு மற்றும் நிர்மாண அபிவிருத்தி நிதியம்

#### 1.5.34.1 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வடமேல் மாகாண வீடமைப்பு மற்றும் நிர்மாண அபிவிருத்தி நிதியத்தின் செயற்பாடுகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களுக்காக ரூபா 236,000 மீளாய்வாண்டின் போது வீடமைப்பு மற்றும் நிர்மாண நிதியத்தில் இருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது் | வீடமைப்பு திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள நிதியத்திற்குரிய கடமை களுக்காக ஈடுபடுத்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் படிகள் கொடுப்பனவு செய்யப்படுகின்றது. | முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் |

### 1.5.35 வடமேல் மாகாண திரிய வீடமைப்பு கடன் முன்மொழிவு முறைமை

#### 1.5.35.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வடமேல் மாகாண சுழற்சி கடன் முன்மொழிவு முறைமைக்குரிய புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் கடன் தவணை மற்றும் வட்டி அறவீடு அடகு மற்றும் முதலீட்டு வங்கியின் மூலம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனினும் சுழற்சி வீடமைப்பு கடன் முன்மொழிவு முறையின் கீழ் கடன் வழங்கப்பட்டுள்ள 156 கடனாளிகளிடமிருந்து கடன் தவணைகள் 01 முதல் 57 தவணைகள் வரையான வீச்சில் ரூபா 8,552,065 ஆக இருந்தது. | நிதியத்திற்குரிய பெற வேண்டிய தொகையை வடமேல் மாகாண திரிய சுழற்சி கடன் முன்மொழிவு முறைமைக்கு செலவு வைக்கக் கூடிய வகையில் சட்டங்களை திருத்தம் செய்வதற்கு முன்வழியப்பட்டுள்ளது. | குறித்த சட்டத்தை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.36 வடமேல் மாகாண விவசாய முயற்சியாளர்கள் அபிவருத்தி சுழற்சிக் கடன் முறைமை

#### 1.5.36.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விவசாய முயற்சியாளர்களுக்கு அபிவிருத்தி சுழற்சி நிதியத்தின் மூலம் வழங்கப்பட்ட கடனின் கீழ் ஏதேனும் | வங்கிக்கு தவணை மற்றும் வட்டி கொடுப்பனவு செய்யப்படாத போதும் | காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| திட்டவட்டமான திகதியில் காலாவதியான அல்லது அறவீடுகள் நிலுவையாக உள்ள கடன் தொடர்பான தகவல்களை இனங்கானப்படாமல் இருந்ததுடன் நிதி கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டினக் இறுதியில் சுழற்சி கடன்பட்டோர் மீதி ரூபா 72,178,374 ஆக இருந்தது. | நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டிய தவணை மற்றும் வட்டி என்பவற்றை வங்கியால் நிதியத்திற்கு வழங்க கடப்பாடு உள்ளது. | |

### 1.5.37 வடமேல் மாகாண கடற்றொழில் சுழற்சிக் கடன் முன்மொழிவு முறைமை

#### 1.5.37.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடற்றொழில் மேம்படுத்தல் சுழற்சி நிதி நிதியம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு சாசனம் ஒன்றின் மூலம் அல்லது விதிக்கோவை ஒன்று மூலம் அங்கீகாரம் இல்லாமல் 2008 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டிருந்தது. | சுழற்சி கடன் நிதியத்திற்காக வரைவாக்கப்பட்ட விதிக்கோவை இரண்டாவது தடவை திருத்தப்பட்டதன் பின்னர் அங்கீகாரத்திற்காக பிரதான செயலாளர் அலுவலகத்தின் மூலம் ஆளுநர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | நிதியத்தை ஆரம்பிப்பதற்கு வடமேல் மாகாண சபையிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

#### 1.5.37.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீள் நிதி கடனுக்காக மாதாந்த வட்டி கணக்கிடப்பட்டு காலாண்டு ரீதியாக சுழற்சி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ள வட்டியின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான தகவல்கள் வங்கியால் சமர்ப்பிக்கப்படாமல் இருந்தத்துடன் நிதியத்தின் மூலமும் காலாண்டு ரீதியாக செலவு வைக்கப்பட வேண்டிய வட்டியின் சரியான தன்மையை உறுதிப்படுத்து வதற்கு முறையான வேலை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வங்கியினால் கடற்றொழில் சுழற்சி கடன் நிதியத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த மீள்நிதி கடனுக்காக அறவிடப்பட்ட வட்டி தொடர்பில் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக தேவையான கணக்கிடல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | சுழற்சி நிதியத்திற்கு சரியான வட்டி செலவு வைக்கப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்து வதற்கு முறையான வேலை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும் |

**1.5.38 வடமேல் மாகாண நீர்ப்பாசன நிலைபேறான பராமரிப்பு நிதியம்**

**1.5.38.1 செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் சிறிய நீர்ப்பாசன பராமரிப்புக்காக மீளாய்வாண்டின் இறுதிவரை செலுத்த வேண்டிய தொகை ரூபா 16,415,846 ஆக இருந்தது | குளங்களின் பராமரிப்பு நடவடிக்கைகள் நிறைவேற்றப்படுகின்றதா என அவதானிக்கப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குளத்தின் பராமரிப்பு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு பணத்தை குறித்த திகதியில் செலுத்த வேண்டும். |